முனைவர். பேரா.சாஜின்



# நாய்கள் பெருத்த கும்பகோணம்!

கும்பகோணம் பகுதி பாதுகாப்பற்ற பகுதியாக மாறிக் கொண்டிருக்கிறது. மனிதன் நடமாட்டம் உள்ள இடங்களில் நாய்கள் நடமாடுகின்றனவா அல்லது நாய்கள் நடமாடுகின்ற பகுதிகளில் மனிதன் நடமாடுகின்றனா? என்ற வினா எழுந்து விட்டது.

நாய்கள்-இருவகை: வீட்டு நாய்கள், தெருநாய்கள். மனிதனின் கட்டுப்பாட்டில் அவன் கொடுக்கும் உணவை உட்கொண்டு சாகசங்களை காண்பித்து, அவன் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து வாழும் நாய்கள், வீட்டு நாய்களாகும். சாகசங்களைச் செய்வதில் வீட்டு நாய்களை விட தெரு நாய்கள் முன்னிலையில் நிற்பதாக சமீபக்காலத்தில் ஒரு பத்திரிக்கை, செய்திவெளியிட்டிருந்தது.

## மனிதனுக்கும் தெரு நாய்களுக்கும் உள்ள உறவுகள்:

தெருநாய்கள் எந்தத் தெருவிலும் எந்த நேரத்திலும் திரியும் சுபாவம் உள்ளவை. மனிதன் அன்று விலங்குகளை வேட்டையாடச் சென்றபோது அவனுக்கு அடங்காத விலங்குகளை வேட்டையாடி இறைச்சியாக உண்ணவும் வியாபாரத்திற்கும் பயன்படுத்தி வந்தான். அப்படிக்காட்டுக்குள் சென்ற மனிதன் அதனதன் குணநலன்களைப் பார்த்து விலங்குகளை மயன்கண்டும், வயல்கண்டும் பிடித்து மயண்டாக தோன்றும் விலங்குகளைப் பிடித்து வந்து, அவற்றை வீட்டு விலங்குகளாக வளர்த்துப் பலன் அடைந்தான்.

பால், இறைச்சி என்று தமக்கு வாழ்வளிக்கும் விலங்குகளான ஆடு, மாடு, ஒட்டகம், நாய் போன்ற விலங்குகளை தன்னுடன் வாழும்படியாக அனுமதி கொடுத்து வந்தான்.

நான் வேலைப்பார்க்கும் அரசு கலைக்கல்லூரி (ஆடவர்), கும்பகோணத்தில் உள்ளது. கும்பகோணம் மக்களை மிகவும் அச்சத்தில் உறையவைக்கும் பல விசயங்களில் முதன்மையானது தெரு நாய்கள்தாம். எங்குப் பார்த்தாலும் நாய்க்கூட்டங்கள் - கல்லூரி வளாகத்திலும் விளையாட்டுத் திடலிலும், தேநீர் அருந்தும் கடைகளிலும் நாயின் தொல்லைகள் எண்ணிலடங்கா.

எந்த நேரத்திலும் அவை மனிதன் மேல் பாய்ந்துத் தாக்கக்கூடும். இப்படிப்பட்ட

நாய்களின் தாக்குதலுக்கு ஆளாகியவர்களுள் நானும் ஒருவன்.

ஒரு நாள் மாலை நான், தேநீர் அருந்தச் சென்றேன். மின்சாரம் தடைப்பட்டது. நான்கு தெரு நாய்கள் ஒன்று சேர்ந்து மிகவும் அமைதியாக ஒரு வீட்டின் உள்ளிருந்து வெளியே வந்தன. அவற்றில் ஒன்று என் காலைக் கடித்துவிட்டது.

என் முன்பக்கமாக வந்திருந்தால் அதனை எதிர்த்து நின்றிருப்பேன்; அன்றேல் தப்பிக்க முயன்றிருப்பேன். மிகவும் அமைதியாக நடந்து வந்து கொண்டிருந்த என்னைப் பின்பக்கமாக வந்து கடித்தது.

காலவலியுடன் அரசு மருத்துவமனைக்குச் சென்றேன். உடனே தடுப்பூசி போட்டார்கள்.

இதுவும் முக்கியமல்ல, நாய்கடித்தபிறகு உள்ள நாட்கள்தான் மிகமுக்கியம். எனது சொந்தக்கார மருத்துவரிடம் தொலைப்பேசியில் தொடர்புகொண்டு கேட்டேன். சில உண்மைகளை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன். "அந்த நாய் 15 நாட்கள் வரை இறக்காமல் இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ளுங்கள்" என்று கூறினார்.

"எப்படி நான் பார்த்துக் கொள்ளமுடியும். அது ஒரு தெரு நாயாச்சே" என்றேன். "ராபிஸ் என்ற நோய் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

"அந்த நாய்க்கு ராபிஸ் நோயிருந்து அது யாரையாவது கடித்தால் கடித்த 15 நாட்களுக்குள் நாய் இறந்துவிடும்! அவ்வாறு இறந்தால் கடிக்கப்பட்டவர்கள் மிகவும் கவனமாக இருக்கவேண்டும்" என்று பதில் சொன்னார். பயந்து போனேன். இது என்னடா புதிய கதை.

சமீபத்தல் நான் வாசித்த "தி இந்து" ஆங்கிலப் பத்திரிகையில் வந்த ஒரு செய்தி இந்த ராபீஸ்நோயால் ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவில் இறக்கக்கூடிய மக்களின் எண்ணிக்கை 20 ஆயிரம் பேர்கள் என்று ரீதா சுப்பிரமணியம் கூறியிந்தார். இந்த ராபீஸ்நோய் 100 விழுக்காடு கொடிய நோயென்றும், அதைப்போல் 100 விழுக்காடு தடுக்கவும் முடியுமென்றும் கூறுகிறார்.

இதுவும் மிகவும் முக்கியமானதல்ல. எத்தனை பேருக்கு ராபீஸ் தடுப்பூசி பற்றித் தெரியும். சரியான நேரத்தில் தடுப்பூசி போடவேண்டியதன் அவசியத்தையும். இந்தத் தருணத்தில் ஐந்து ஊசிகள் போடவேண்டும் என்பதும் இங்குள்ளவர்களில் எத்தனை பேருக்கு தெரியும்? நாய் கடித்தவுடன் நாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் என்ன? நாய்களைக் கட்டுப்படுதவும். தெரு நாய்களை கட்டுப்படுத்தவும் அவைகளுக்கு தடுப்பூசிப் போடவும் வருகின்ற அரசுப் பணியாளர்கள் அதனைப் பிடித்து ஊசிபோட்டு திருப்பி அனுப்பிவிடுவார்கள். என்னதான் கொடுமை இனப்பெருக்கம்.

"அறண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்பதுபோல நாய் கடித்தப்பிறகுள்ள நாட்களில் எதைப் பார்த்தாலும் பயம். பயம் அதிகமான காரணத்தால் ராபீஸ்நோயால் பாதிக்கப்பட்ட நாயா அல்லது ஊசி போடப்பட்ட நாயா என்று தெரியாமல் ஏராளமான மக்கள் பல சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

அந்த நாயின் சொந்தக் காரரிடம் கேட்டேன். "அந்த நாய் குறைந்தது ஒரு ஆண்டிற்கு 10, 15 பேரைக் கடிக்கும்" என்றும் "அந்த வழியில் வருவோரைத் துரத்தும் அல்லது குரைக்கும்" என்றும் "அது மிகவும் மோசமான நாய்" என்றும் கூறினார்.

என்னைக்கடித்த அந்த வாரத்தில் வேறு இரண்டு பேரைக் கடித்தது என்றும் அதனால் பாதிப்பு இல்லையென்றும் அந்த வாரத்திற்கு முன்னால்தான் மக்கள் நகராட்சியிடம் விண்ணப்பம் கொடுத்ததால், ஊசிப்போட்டு திருப்பி அனுப்பிவிட்டார்கள் என்றும் சொன்னார். ஆனாலும், அதனுடைய குணத்தில் மாற்றமில்லையாம்.